செய்தி வெளியீடு எண். 30-2016 நாள்: 17.10.2016

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் காலியாக உள்ள ஒரு அலுவலக உதவியாளர் பணியிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

******

திண்டிவனம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் அலுவலக உதவியாளர் பணியாளர் ஒரு பணியிடத்திற்கு கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பதாரர் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். பொதுப்பிரிவினரில் முன்னுரிமை பெற்றவராக இருக்க வேண்டும். ஊதிய விகிதம் 4800-10000 தர ஊதியம் 1300. விண்ணப்பம் முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், சந்தைமேடு, திண்டிவனம் என்ற முகவரிக்கு 31.10.2016க்குள் வந்து சேர வேண்டும். வயது வரம்பு அனைத்து பிரிவினருக்கும் குறைந்தது 18 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும். அதிக பட்ச வயது SC, SCA, ST பிரிவினர் - 35 வயது, MBC, BC - 32 வயது மற்ற வகுப்பினர் - 30 வயது உள்ளவராக இருக்க வேண்டும்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.